# தூய ஆவி திருவிழிப்பு ஆரதனைப் பெருவிழா

04.06.2022 - 05.06.2022

19:00PM – 6:00AM

www.tamilcatholicdaily.com

## பாடல் தலைப்புகள்

19:00 – 19:45

1. இறங்கி வா நெருங்கி வா
2. ஆராதனை ஆராதனை

19:45 – 20:00

3. ஓயாத கருணையின்
4. என் இதயத்தின் காயத்தை

20:10 – 20:20

5. வாழிய மூவொரு இறைவா
6. ஒரேஒரு வார்த்தை

20:40 – 20:50

7. தூய ஆவியாரே என்

21:00 – 21:10

8. உம்மை அல்லாமல்

21:28 – 21:38

9. உன்னில் நானும் வாழவே

21:47 – 21:57

10. ஆவியான தேவனே

22:07 – 22:17

11. என் வாழ்வின் ஆதாரம்

22:37 – 22:47

12. கருணைக்கடலே

23:15 – 23:30

13. நல்லது நல்லது நல்லதே
14. தாயைப்போல தாலாட்டும்

23:50 – 00:05

15. உனக்கே புகழ்கீதம்
16. நீதானே இறைவா

00:25 – 00:40

17. இரக்கம் மிகுந்தவரே
18. சுகராகம் நீயே இயேசுவே

01:10 – 01:25

19. நற்கருணையிலே
20. ஆவியானவரே அல்லல்

01:45 – 02:00

21. என்னைத்தொட்டு நலமாக்கும்
22. அன்பின் ஊற்றை அருளின்

02:30 – 02:45

23. ஆண்டவர் நானே உன்னோடு
24. வா மன்னவா என்

03:55 – 04:10

25. தூங்காத இமைபோல
26. பூவுலகெங்கும் அழகழகான

03:05 – 03:20

27. யாதொன்றும் குறையில்லை
28. உன்னோடு நான் வாழும்

04:30 – 04:45

29. ஐயா உம் பிரசன்னம்
30. தூய ஆவியே துணை வரும்

05:05 – 05:20

31. மாண்புயர் இவ்வருள்
32. அருட்திரு தேவதேவன்

05:30 – 06:00

33. இறையுறவில் மலர்ந்திடுவோம்
34. உள்ளம் வருந்தி உள்ளம் திருந்தி
35. வந்தோம் தந்திடவே தந்தாய்
36. இதய விரும்பும் இனிய தேவன்
37. நன்றியோடு பாடுவேன் நாதனை
38. அம்மா அமுதினும் இனியவளே

## 1. இறங்கி வா நெருங்கி வா

இறங்கி வா நெருங்கி வா
தேடும் தெய்வமே தேடும்
தெய்வமே

இறங்கி வா நெருங்கி வா
தேடும் தெய்வமே நான் தேடும்
தெய்வமே
என்றும் எந்தன் இதயம் வாழ
இயேசு தேவா இறங்கி வா
இறங்கி வா...

உலக ஆசையில் மயங்கினேன்
உம்மை இழந்து உளர்கின்றேன்
தவறினை தினம் உணர்கின்றேன்
தனிமையில் தினம் தவிக்கின்றேன்
மன்னியும் தேவா அமைதி தாராய்
புதிய மனிதனாய் மாற்ற வா
இறங்கி வா நெருங்கி வா
தேடும் தெய்வமே நான் தேடும் தெய்வமே
என்றும் எந்தன் இதயம் வாழ
இயேசு தேவா இறங்கி வா
இறங்கி வா...

இழிவு வாழ்வில் மறைந்தது
இனிமை நாளும் பிறந்தது
வலிமை மனதில் நிறைந்தது
திருக்குருதியில் குணம்
அடைந்தது
கனிதரும் வாழ்வாய் என்னை
மாற்றவா
புவியில் சீடனாய் வாழவே
இறங்கி வா நெருங்கி வா
தேடும் தெய்வமே நான்
தேடும் தெய்வமே
என்றும் எந்தன் இதயம்
வாழ
இயேசு தேவா இறங்கி வா
இறங்கி வா... - 3

## னதைாரஆ னதைாரஆ .2

ஆராதனை ஆராதனை ஆராதனை - 2

அருளின் அருவியே ஆராதனை
அன்பின் அமுதமே ஆராதனை - 2
அழியா உடலே ஆராதனை - 2
ஆராதனை ஆராதனை ஆராதனை

உன்பாதம் அமர்ந்து ஆராதிப்பேன்
உன் நினைவில் என்றும் ஆராதிப்பேன்-2
ஆராதனை ஆராதனை ஆராதனை

நாளும்பொழுதும் ஆராதிப்பேன்
ஞானஒளி நாயகனை ஆராதிப்பேன் - 2
ஆராதனை ஆராதனை ஆராதனை

விண்ணவர் மகிழ்ந்திட ஆராதிப்பேன்
விண்ணக வேந்தனை ஆராதிப்பேன் - 2
ஆராதனை ஆராதனை ஆராதனை

அன்பெனும் ஒளியேற்றி ஆராதிப்பேன்
அகந்தையை அழிக்க வேண்டி ஆராதிப்பேன் 2
ஆராதனை ஆராதனை ஆராதனை

## 3. ஓயாத கருணையின் இறைவனே

ஓயாத கருணையின் இறைவனே
உளமார்ந்த நன்றி நன்றி - 2
பாயாத இடமெல்லாம் பாய்ந்து ஓடிடும் - 2
காயாமல் அவை என்றும் பயன்கள்
நல்கிடும்
ஓயாத கருணையின் இறைவனே
உளமார்ந்த நன்றி நன்றி

காலங்கள் மாறலாம்
கடல் வற்றிப் போகலாம்
ஆனால் உன் கருணையோ மாறாதது
மலை சாய்ந்து போகலாம்
மனம் கல்லாய் போகலாம்
ஆனால் உன் கருணையோ தீராதது
மாறாத இறைவா
தீரா உன் கருணையை
இறவாத வரையில் மறவாது புகழ்வேன் - 2
ஓயாத கருணையின் இறைவனே
உளமார்ந்த நன்றி நன்றி - 2

சொந்தங்கள் மாறலாம்
சுவையற்றுப் போகலாம்
ஆனால் உன் கருணையோ மாறாதது
எல்லாமும் மாறலாம்
இல்லாமல் போகலாம்
ஆனால் உன் கருணையோ தீராதது
மாறாத இறைவா
தீரா உன் கருணையை
இறவாத வரையில் மறவாது புகழ்வேன் - 2

ஓயாத கருணையின் இறைவனே
உளமார்ந்த நன்றி நன்றி - 2
பாயாத இடமெல்லாம் பாய்ந்து ஓடிடும் - 2
காயாமல் அவை என்றும் பயன்கள்
நல்கிடும்
ஓயாத கருணையின் இறைவனே
உளமார்ந்த நன்றி நன்றி - 2
உளமார்ந்த நன்றி நன்றி
உளமார்ந்த நன்றி நன்றி.

## 4. என் இதயத்தின் காயத்தை ஆற்றிடும்

என் இதயத்தின் காயத்தை ஆற்றிடும்
எந்தன் இயேசையா - 2
கரைகாணா படகைப்போல
தடுமாறும் வாழ்க்கைஐயா - 2
இதயத்தின் காயத்தை ஆற்றிடும்
எந்தன் இயேசையா

யோவானைப்போல உன்மார்பிலே
இளைப்பாற வேண்டும்ஐயா - 2
கரைகாணா படகைப்போல
தடுமாறும் வாழ்க்கைஐயா - 2
இதயத்தின் காயத்தை ஆற்றிடும்
எந்தன் இயேசையா

பெலவீனமான என்னையும் - உம்
பலத்தால் இடைகட்டுவீர் - 2
கரைகாணா படகைப்போல
தடுமாறும் வாழ்க்கைஐயா - 2
என் இதயத்தின் காயத்தை ஆற்றிடும்
எந்தன் இயேசையா

காணாமல்போன ஆடுநான்
அன்போடு தேடினீரே - 2
கரைகாணா படகைப்போல
தடுமாறும் வாழ்க்கைஐயா - 2
என் இதயத்தின் காயத்தை ஆற்றிடும்
எந்தன் இயேசையா - 2
கரைகாணா படகைப்போல
தடுமாறும் வாழ்க்கைஐயா - 2
இதயத்தின் காயத்தை ஆற்றிடும்
எந்தன் இயேசையா

## 5. வாழிய மூவொரு இறைவா

வாழிய மூவொரு இறைவா - 2
தூய மூவொரு இறைவா இறைவா
வாழிய மூவொரு இறைவா
தூய மூவொரு இறைவா இறைவா
வாழிய மூவொரு இறைவா
இணைந்த மூவொரு இறைவா
இறைவா
வாழிய மூவொரு இறைவா
இணைந்த மூவொரு இறைவா
இறைவா
வாழிய மூவொரு இறைவா

படைக்கும் மூவொரு இறைவா
இறைவா
வாழிய மூவொரு இறைவா
படைக்கும் மூவொரு இறைவா
இறைவா
வாழிய மூவொரு இறைவா
மீட்கும் மூவொரு இறைவா
இறைவா
வாழிய மூவொரு இறைவா
மீட்கும் மூவொரு இறைவா
இறைவா
வாழிய மூவொரு இறைவா

அர்ச்சிக்கும் மூவொரு இறைவா
இறைவா
வாழிய மூவொரு இறைவா
அர்ச்சிக்கும் மூவொரு இறைவா
இறைவா
வாழிய மூவொரு இறைவா - 3

## 6 .ஒரேஒரு வார்த்தை

ஒரேஒரு வார்த்தை சொல்லும் இயேசுவே
என்வாழ்வு மீட்படையும் இயேசுவே - 2
இயேசுவே இயேசுவே
இயேசுவே இயேசுவே - 2

குருடர் செவிடர் குணமடைந்தனர் இயேசுவே
உம் ஒரு சொல்லால்
நலமடைந்தனர் இயேசுவே - 2
துன்ப துயர சுமைகளோடு நிற்கின்றோம் - 2
உம் ஒரு சொல்லால் திடமாக்கும் இயேசுவே -
2
ஒரேஒரு வார்த்தை சொல்லும் இயேசுவே
என்வாழ்வு மீட்படையும் இயேசுவே
இயேசுவே இயேசுவே
இயேசுவே இயேசுவே - 2

புயல்காற்றை ஒரே சொல்லால் அடக்கினீர்
உம் வார்த்தையாலே இறந்தோரை உயிர்ப்பித்தீர்
- 2
அமைதி இழந்து அவயம் தேடி தவிக்கின்றோம்
- 2
நல்வழிகாட்டி அணைப்பாயே இயேசுவே - 2
ஒரேஒரு வார்த்தை சொல்லும் இயேசுவே
என்வாழ்வு மீட்படையும் இயேசுவே
இயேசுவே இயேசுவே
இயேசுவே இயேசுவே - 2

எந்தத் தீங்கும் எதுவந்தாலும் இயேசுவே
உம் வார்த்தை தானே அரணாகும் இயேசுவே -
2
தடம்மாறி நிலைமாறும் வேளையில் - 2
உம் இறைவார்த்தை கரைசேர்க்கும்
இயேசுவே - 2
ஒரேஒரு வார்த்தை சொல்லும் இயேசுவே
என்வாழ்வு மீட்படையும் இயேசுவே - 2
இயேசுவே இயேசுவே
இயேசுவே இயேசுவே - 3

## 7. தூய ஆவியாரே என்

தூய ஆவியாரே என்துணையாளர் என்றும்
நீரே - 2
ஆசீர்வதியும் ஆசீர்வதியும்
புதிய மனிதனாய் என்னை மாற்றிடும் - 2

உம் வல்லமை எம்மில் நிரம்பிடவே
உம் வரங்கள் என்றும் நிலைத்திடவே - 2
ஆசீர்வதியும் ஆசீர்வதியும்
புதிய மனிதனாய் என்னை மாற்றிடும் - 2

உண்மையின் வழியில் நடந்திடவே
உலகினில் சுடர்ந்து ஒளிர்ந்திடவே - 2
ஆசீர்வதியும் ஆசீர்வதியும்
புதிய மனிதனாய் என்னை மாற்றிடும் - 2

அன்பினில் ஒன்றாய் கூடிடவே
உம் அருளினை என்றும் பகிர்ந்திடவே - 2
ஆசீர்வதியும் ஆசீர்வதியும்
புதிய மனிதனாய் என்னை மாற்றிடும் - 2

கவலைகள் முழுவதும் நீக்கிடவே
காயங்கள் அனைத்தும் ஆற்றிடவே - 2
ஆசீர்வதியும் ஆசீர்வதியும்
புதிய மனிதனாய் என்னை மாற்றிடும் - 2

பணிகளில் கனிகள் விளைந்திடவே
உம் சிறகின் நிழலில் அமர்ந்திடவே - 2
ஆசீர்வதியும் ஆசீர்வதியும்
புதிய மனிதனாய் என்னை மாற்றிடும் - 2
தூய ஆவியாரே- என்
துணையாளர் என்றும் நீரே - 2
ஆசீர்வதியும் ஆசீர்வதியும்
புதிய மனிதனாய் என்னை மாற்றிடும் - 2

## 8. உம்மை அல்லாமல்

உம்மை அல்லாமல் எனக்கு யாருண்டு - 4
என் இயேசைய்யா அல்லேலூயா - 4

இன்பத்திலும் நீரே துன்பத்திலும் நீரே - 2
எவ்வேளையும் ஐயா நீ தானே - 2
உம்மை அல்லாமல் எனக்கு யாருண்டு - 2

என் சிநேகமும் நீரே என் ஆசையும் நீரே - 2
என் எல்லாமே ஐயா நீ தானே - 2
உம்மை அல்லாமல் எனக்கு யாருண்டு - 2

இம்மையிலும் நீரே மறுமையிலும் நீரே - 2
எந்நாளுமே ஐயா நீ தானே - 2
உம்மை அல்லாமல் எனக்கு யாருண்டு - 4
என் இயேசய்யா அல்லேலூயா - 4

## 9. உன்னில் நானும் வாழவே

உன்னில் நானும் வாழவே என்னை நீயே ஆளுவாய் - 2
உன்னில் எனைச் சேர்த்துக் கொள்வாய்
உன்னோடு அழைத்துச் செல்வாய்
உன்னில் நானும் வாழவே என்னை நீயே ஆளுவாய்

உன்னோடு ஒன்றாகக் கலந்ததனால்
இருளான என் வாழ்வு சுடரானதே - 2
நீயின்றி எனக்கென எதுவுமில்லை - 2
நின்பாத நிழல் ஒன்றே போதும்
உன்னில் நானும் வாழவே என்னை நீயே ஆளுவாய்

கண்ணீரின் பாரங்கள் எனை சாய்க்கையில்
தாயாக நீ மாறி எனைத் தேற்றினாய் - 2
நீயின்றி ஆறுதல் எனக்கு இல்லை - 2
உன் சொந்தம் ஆனாலே போதும்
உன்னில் நானும் வாழவே என்னை நீயே ஆளுவாய் - 2
உன்னில் எனைச் சேர்த்துக் கொள்வாய்
உன்னோடு அழைத்துச் செல்வாய்
உன்னில் நானும் வாழவே என்னை நீயே ஆளுவாய்

## 10. ஆவியான தேவனே

ஆவியான தேவனே
அசைவாடுமே
அருள் பொழியும் ஜீவனே
ஆட்கொள்ளுமே - 2
வாரும் ஆவியே தூய
ஆவியே - 4
ஆவியான தேவனே
அசைவாடுமே
அருள் பொழியும் ஜீவனே
ஆட்கொள்ளுமே

தெய்வீக அக்கினியே இறங்கி
வாருமே
உம் திருக்கரத்தின்
வல்லமையை
பொழிந்திடுமையா - 2
திருக்கரத்தின் வல்லமையை
பொழிந்திடுமையா - 2
ஆவியான தேவனே
அசைவாடுமே
அருள் பொழியும் ஜீவனே
ஆட்கொள்ளுமே

ஆன்மாவின் ஆத்மாவே
அன்பின் ஆவியே
என் சுவாசமாக என்னோடு
தங்கிடுமையா - 2
சுவாசமாக என்னோடு
தங்கிடுமையா - 2
ஆவியான தேவனே
அசைவாடுமே
அருள் பொழியும் ஜீவனே
ஆட்கொள்ளுமே

## 11. என் வாழ்வின் ஆதாரம்

என் வாழ்வின் ஆதாரம்
என் இயேசு நீர்தானையா
எனையாளும் என் மன்னவா
என் வாழ்வின் துணையாக வா - 2
என் வாழ்வின் ஆதாரம்

சூரியன் இல்லையென்றால் நிலவின் கதி
என்ன
எல்லாமே எனக்கு நீ இனியும்
குறையென்ன
கடலில் ஆழம் போலவே கருணை
மிகுந்தவரே
காலைநேரத் தென்றலாக கனிவோடு
என்னில் வாருமே
என் வாழ்வின் ஆதாரம்
என் இயேசு நீர்தானையா
எனையாளும் என் மன்னவா
என் வாழ்வின் துணையாக வா
என் வாழ்வின் ஆதாரம்

மலருக்கு மணமாக பயிருக்கு மழையாக
எனக்குள்ளே உயிராக இருக்கும்
வல்லவரே
நானிலம் காக்கும் நல்லவரே
நான் உந்தன் செல்லப்பிள்ளை
எனக்குத் துணை நீயாய் இருக்க
என்னைச் சூழ்ந்த அன்பே வாரும்
என் வாழ்வின் ஆதாரம்
என் இயேசு நீர்தானையா
எனையாளும் என் மன்னவா
என் வாழ்வின் துணையாக வா - 2
என் வாழ்வின் ஆதாரம்

## 12. கருணைக்கடலே

கருணைக் கடலே கல்வாரி நாயகா - 2
என்னையும் தெரிந்து கொண்டீரே
அன்பின் உருவே அநாதி தேவனே
என்னையும் அணைத்துக் கொண்டீரே
என்னையும் அணைத்துக் கொண்டீரே
எப்படி நான் நன்றி சொல்வேன் இயேசைய்யா
என்னையே நான் தருகிறேன் ஆசையாய்
உமக்கு எப்படி நான் நன்றி சொல்வேன் இயேசைய்யா
என்னையே நான் தருகிறேன் ஆசையாய்
கருணைக் கடலே கல்வாரி நாயகா - 2

நான் அழுத நேரமெல்லாம் தேடி வந்தீரே
நான் இருப்பேன் என்று சொல்லி
ஆறுதல் தந்தீரே - 2
நான் இருப்பேன் என்று சொல்லி ஆறுதல் தந்தீரே - 2
எப்படி நான் நன்றி சொல்வேன் இயேசைய்யா
என்னையே நான் தருகிறேன் ஆசையாய்
உமக்கு எப்படி நான் நன்றி சொல்வேன் இயேசைய்யா
என்னையே நான் தருகிறேன் ஆசையாய்
கருணைக் கடலே கல்வாரி நாயகா - 2

என் தனிமை நேரம் எல்லாம்
துணையாய் நின்றீரே
அன்பு செய்து அரவணைத்து கிருபை தந்தீரே - 2
அன்பு செய்து அரவணைத்து கிருபை தந்தீரே - 2
எப்படி நான் நன்றி சொல்வேன் இயேசைய்யா
என்னையே நான் தருகிறேன் ஆசையாய்
உமக்கு எப்படி நான் நன்றி சொல்வேன் இயேசைய்யா
என்னையே நான் தருகிறேன் ஆசையாய்
கருணைக் கடலே கல்வாரி நாயகா - 2

என்னையும் கணப்படுத்தி ஊழியம் தந்தீரே
உண்மையாய் நடத்திச் சென்று
பரலோகம் சேர்த்தீரே - 2
உண்மையாய் நடத்திச் சென்று பரலோகம் சேர்த்தீரே - 2
எப்படி நான் நன்றி சொல்வேன் இயேசைய்யா
என்னையே நான் தருகிறேன் ஆசையாய்
உமக்கு எப்படி நான் நன்றி சொல்வேன் இயேசைய்யா
என்னையே நான் தருகிறேன் ஆசையாய்

கருணைக் கடலே கல்வாரி
நாயகா - 2
என்னையும் தெரிந்து
கொண்டீரே
அன்பின் உருவே அநாதி
தேவனே
என்னையும் அணைத்துக்
கொண்டீரே என்னையும்
அணைத்துக் கொண்டீரே
எப்படி நான் நன்றி
சொல்வேன் இயேசைய்யா
என்னையே நான் தருகிறேன்
ஆசையாய்
உமக்கு எப்படி நான் நன்றி
சொல்வேன் இயேசைய்யா
என்னையே நான் தருகிறேன்
ஆசையாய்
எப்படி நான் நன்றி
சொல்வேன் இயேசைய்யா
என்னையே நான் தருகிறேன்
ஆசையாய்
உமக்கு எப்படி நான் நன்றி
சொல்வேன் இயேசைய்யா
என்னையே நான் தருகிறேன்
ஆசையாய் - 3

## 13. நல்லது நல்லது நல்லதே

**நல்லது நல்லது நல்லதே**
**நம் கடவுளைப் புகழ்வது நல்லதே - 5/10**

**அவர் நல்வராம் வல்லவராம்**
**சொல்லரு மாண்புகள் உடையவராம்**
**நல்லது நல்லது நல்லதே**
**நம் கடவுளைப் புகழ்வது நல்லதே**
**அவர் எல்லையில்லா நுண்ணறிஞர்**
**எல்லார்க்கும் தந்தை தாயுமவர்**
**நல்லது நல்லது நல்லதே**
**நம் கடவுளைப் புகழ்வது நல்லதே**
**இந்தப் பூவுலகும் வானுலகும்**
**அவரது அதிசயப் படைப்புக்களாம்**
**நல்லது நல்லது நல்லதே**
**நம் கடவுளைப் புகழ்வது நல்லதே**
**அவர் எளியோரை வாழ்விக்கின்றார்**
**நலிந்தோரைக் கை தூக்குகின்றார்**
**நல்லது நல்லது நல்லதே**
**நம் கடவுளைப் புகழ்வது நல்லதே**

**சிதறுண்டோரை சேர்க்கின்றார்**
**மனமுடைந்தோரை தேற்றுகின்றார்**
**நல்லது நல்லது நல்லதே**
**நம் கடவுளைப் புகழ்வது நல்லதே**
**தமக்கஞ்சுவோரைத் தாங்குகின்றார்**
**நம்பி வந்தோரைக் காக்கின்றார்**
**நல்லது நல்லது நல்லதே**

**நம் கடவுளைப் புகழ்வது நல்லதே**
**வழி தவறிய ஆட்டைத் தேடுகின்றார்**
**தன்னுயிர் தந்து மீட்கின்றார்**
**நல்லது நல்லது நல்லதே**
**நம் கடவுளைப் புகழ்வது நல்லதே**
**அவர் ஒடுக்கப்பட்டோரை உயர்த்துகின்றார்**
**ஒதுக்கப்பட்டோரை வாழ்விக்கின்றார்**
**நல்லது நல்லது நல்லதே**
**நம் கடவுளைப் புகழ்வது நல்லதே**

**நல்லது நல்லது நல்லதே**
**நம் கடவுளைப் புகழ்வது நல்லதே - 4/8**

## 14. தாயைப்போல தாலாட்டும்

தாயைப்போல தாலாட்டும்
மார்போடு அரவணைக்கும்
என் நேசர் என்றும் எந்தன் கூட இருப்பார் - 2
இயேசு எந்தன் இதயத்திலே குடியிருப்பார்
தாயைப்போல தாலாட்டும்
மார்போடு அரவணைக்கும்
என் நேசர் என்றும் எந்தன் கூட இருப்பார் - 2
இயேசு எந்தன் இதயத்திலே குடியிருப்பார்

உன் நாமம் சொல்லசொல்ல
என் மனம் மகிழுதையா
உன் அன்பைப் பாடப்பாட
உன் உறவில் நீர்ந்ததையா
உன் நாமம் சொல்லசொல்ல
என் மனம் மகிழுதையா
உன் அன்பைப் பாடப்பாட
உன் உறவில் நீர்ந்ததையா
தெரிந்து கொண்டவர் நீரே
ஒருபோதும் கைவிட மாட்டீர் - என்னைத்
தெரிந்து கொண்டவர் நீரே
ஒருபோதும் கைவிட மாட்டீர்
தாயைப்போல தாலாட்டும்
மார்போடு அரவணைக்கும்
என் நேசர் என்றும் எந்தன் கூட இருப்பார்
இயேசு எந்தன் இதயத்திலே குடியிருப்பார்

என்துன்ப நேரத்திலும் கண்ணீர் சிந்தும் வேளையிலும்
கலங்காதே மகனே என் அருமை மகனல்லவா
என்துன்ப நேரத்திலும் கண்ணீர் சிந்தும் வேளையிலும்
கலங்காதே மகனே என் அருமை மகனல்லவா
வழியும் உண்மையும் நீரே
எந்நாளும் என்னுடன் நீரே
என் வழியும் உண்மையும் நீரே
எந்நாளும் என்னுடன் நீரே

தாயைப்போல தாலாட்டும்
மார்போடு அரவணைக்கும்
என் நேசர் என்றும் எந்தன் கூட இருப்பார் - 2
இயேசு எந்தன் இதயத்திலே குடியிருப்பார்
தாயைப்போல தாலாட்டும்
மார்போடு அரவணைக்கும்
என் நேசர் என்றும் எந்தன் கூட இருப்பார் - 2
இயேசு எந்தன் இதயத்திலே குடியிருப்பார்

## 15. உனக்கே புகழ்கீதம்

**உனக்கே புகழ்கீதம் இசைப்பேன் எந்த நாளும்**
**உன்னிலே எந்தன் நெஞ்சம்**
**உறவில் இணைந்து மகிழும்**
**என் உயிரின் உயிரான சொந்தமே**
**உன் அன்பால் எனைத் தேற்ற வா**
**நிறை வாழ்வின் வழியான தெய்வமே**
**நான் வாழ வழிகாட்ட வா**
**உனக்கே புகழ்கீதம் இசைப்பேன் எந்த நாளும்**
**உன்னிலே எந்தன் நெஞ்சம்**
**உறவில் இணைந்து மகிழும்**

**சொந்தங்கள் என்னைப் பிரிந்தாலும்**
**சோர்வில்லை சுகமாய் நானிருப்பேன்**
**உன்னாலே தான்**
**நீங்காத துன்பம் வந்தாலும் தளர்வில்லை ந**
**ிலையாய் நானிருப்பேன்**
**உன்னாலே தான்**
**கண்மூடும் வேளை கலக்கமில்லை உன்னாலே தான்**
**எல்லாமே இன்பம் துன்பமில்லை**
**உன்னாலே தான்**
**உனக்கே புகழ்கீதம் இசைப்பேன் எந்த நாளும்**
**உன்னிலே எந்தன் நெஞ்சம்**
**உறவில் இணைந்து மகிழும்**

**என் அன்னை என்னைத் தாங்கும் முன்**
**பெயர் சொல்லி என்னை நீ அழைத்தாய்**
**உனக்காகத்தான்**
**உன் கையில் என்னைப் பொறித்து வைத்தாய்**
**உன் சிறகின் நிழலில் அரவணைத்தாய் உனக்காகத்தான்**
**என் வாழ்வின் பெருமை எனக்கு இல்லை உனக்காகத்தான்**
**என் ஆயுட்காலம் எனக்கு இல்லை உனக்காகத்தான்**
**உனக்கே புகழ்கீதம் இசைப்பேன் எந்த நாளும்**
**உன்னிலே எந்தன் நெஞ்சம்**
**உறவில் இணைந்து மகிழும்**
**என் உயிரின் உயிரான சொந்தமே**
**உன் அன்பால் எனைத் தேற்ற வா**
**நிறை வாழ்வின் வழியான தெய்வமே**
**நான் வாழ வழிகாட்ட வா**
**உனக்கே புகழ்கீதம் இசைப்பேன் எந்த நாளும்**
**உன்னிலே எந்தன் நெஞ்சம்**
**உறவில் இணைந்து மகிழும்**

## 16. நீதானே இறைவா

நீதானே இறைவா நிலையான சொந்தம்
உனையன்றி உலகில்
எனகேது பந்தம் - 2
உன் அருள் ஒன்றே எனக்கு தஞ்சம்
உனை என்றும் பிரியாது
ஏழை என் நெஞ்சம்
உனை என்றும் பிரியாது ஏழை நெஞ்சம்
நீயே சொந்தம் நீயே தஞ்சம்
நீயே செல்வம் வாழ்வின் மையம் - 2

கொடியோடு இணைந்துள்ள கிளை போலவே
உன்னோடு ஒன்றாகும் அருள் வேண்டுமே - 2
கனிதந்து என்வாழ்வு செழிப்பாகவே - 2
வருவாயே தலைவா என் உயிர் மூச்சிலே
வருவாயே தலைவா என் உயிர் மூச்சிலே
நீயே சொந்தம் நீயே தஞ்சம்
நீயே செல்வம் வாழ்வின் மையம்
நீதானே இறைவா நிலையான சொந்தம்
உனையன்றி உலகில்
எனகேது பந்தம்

நிலைவாழ்வு தருகின்ற வார்த்தைகளோ
இறைமைந்தன் உம்மிடமே இருக்கின்றன - 2
நான் எங்கு போவது உனைப்பிரிந்து - 2
வாழ்வெல்லாம் வருவேன்
உனைத்தொடர்ந்து- 2
நீயே சொந்தம் நீயே தஞ்சம்
நீயே செல்வம் வாழ்வின் மையம்
நீதானே இறைவா நிலையான சொந்தம்
உனையன்றி உலகில்
எனகேது பந்தம்
உன் அருள் ஒன்றே எனக்கு தஞ்சம்
உனை என்றும் பிரியாது
ஏழை என் நெஞ்சம்
உனை என்றும் பிரியாது
ஏழை நெஞ்சம்
நீயே சொந்தம் நீயே தஞ்சம்
நீயே செல்வம் வாழ்வின் மையம் - 3

## 17. இரக்கம் மிகுந்தவரே

இரக்கம் மிகுந்தவரே எல்லாம் வல்லவே
என்மேல் மனமிரங்கி மன்றாட்டைக்
கேட்டருளும் { 2 }

உம்மையே நம்பியுள்ளேன்
புதுவாழ்வு தாருமையா
உம்மாலே எல்லாமே கூடும்
ஒருவார்த்தை பேசுமையா {2}
நம்பிக்கையோடு நலம் வேண்டி வந்தேன்
குணமாக்கும் என்னைக் குணமாக்கும்
நலமாக்கும் என்னை நலமாக்கும் - 2
இரக்கம் மிகுந்தவரே எல்லாம் வல்லவே
என்மேல் மனமிரங்கி மன்றாட்டைக்
கேட்டருளும்

ஆறுதல் தருபவரே
அன்போடு அணைப்பவரே
நலம் தரும் மருத்துவரே
நலமாக்கும் என் மீட்பரே { 2 }
நானிலம் காக்கும் நன்மையின் வடிவே
சுகமாக்கும் என்னை சுகமாக்கும்
துயர் நீக்கி என்னை குணமாக்கும் - 2
இரக்கம் மிகுந்தவரே எல்லாம் வல்லவே
என்மேல் மனமிரங்கி மன்றாட்டைக்
கேட்டருளும்

உடைந்த உள்ளத்தினை
உயிரூட்டமாய் மாற்றும்
உலர்ந்த எலும்புகளை
உயிர் பெற்று எழச்செய்யும் {2}
கருணையின் மழையே
கல்வாரி அன்பே
புதுப்படைப்பாய் எனைமாற்றும்
புதுப்பலத்தால் எனைநிரப்பும் - 2
இரக்கம் மிகுந்தவரே எல்லாம் வல்லவே
என்மேல் மனமிரங்கி
மன்றாட்டைக் கேட்டருளும் - 2

## 18. சுகராகம் நீயே இயேசுவே

சுகராகம் நீயே இயேசுவே உம் நாமம் போற்றுவேன்
தெவிட்டாத நீர்ச்சுனையாகவே கவி நூறு பாடுவேன்
மேகமாய் பொழியும் அருளும் நீ
நேசமாய்த் தாங்கும் தாய்மடி நீ - 2
தினம் தோறும் வாழ்த்துவேன்
சுகராகம் நீயே இயேசுவே உம் நாமம் போற்றுவேன்
தெவிட்டாத நீர்ச்சுனையாகவே கவி நூறு பாடுவேன்

உந்தன் தோளில் சாயும் நேரம் என்னை மறக்கிறேன்
உந்தன் மூச்சில் இணையும் போது என்னைத்
துறக்கிறேன்
அன்பின் சிறகில் நாளும் நானும் விடியல் காணுவேன்
அழகின் இமையில் இனிதாய் எதிலும் புதிதாய்
தோன்றுவேன்
நீயே எந்தன் ஜீவன்
நீயே எந்தன் ஆற்றல்
நீயே இல்லை என்றால் எனது உலகம் இல்லை
சுகராகம் நீயே இயேசுவே உம் நாமம் போற்றுவேன்
தெவிட்டாத நீர்ச்சுனையாகவே கவி நூறு பாடுவேன்

கருணை நிறைந்த பார்வை போதும்
பகைமை அழிக்கிறேன்
அருகில் அமரும் இதயம் தந்தால் சுயத்தை
இழக்கிறேன்
உதயம் தேடும் மலராய் இறைஉன் நினைவில்
வாழுவேன்
புவியில் விழுந்த விதையாய் உலகில் விருட்சம்
தேடுவேன்
நீயே எனக்கு சொந்தம்
நீயே வாழ்வின் தஞ்சம்
உயிரே நீயும் இல்லை என்றால் நானும் இல்லையே
சுகராகம் நீயே இயேசுவே உம் நாமம் போற்றுவேன்
தெவிட்டாத நீர்ச்சுனையாகவே கவி நூறு பாடுவேன்
மேகமாய் பொழியும் அருளும் நீ
நேசமாய்த் தாங்கும் தாய்மடி நீ - 2
தினம் தோறும் வாழ்த்துவேன்
சுகராகம் நீயே இயேசுவே உம் நாமம் போற்றுவேன்
தெவிட்டாத நீர்ச்சுனையாகவே கவி நூறு பாடுவேன்

## 19. நற்கருணையிலே

நற்கருணையிலே எழுபவரே
ஆராதனை புரிவோம்
எம் அருகினிலே வருபவரே
ஆராதனை புரிவோம் ..

நற்கருணையிலே எழுபவரே
ஆராதனை புரிவோம்
எம் அருகினிலே வருபவரே
ஆராதனை புரிவோம் -2

வருக வருக என்று
அழைக்கும் மனதில் வந்து
அமர்ந்து அமர்ந்து
அன்பைப் பொழிபவரே
நினைவு முழுதும் அன்பில்
நனைந்து நனைந்து
உம்மில் முழுதும்
இணைந்திருக்க அழைப்பவரே {2}
உமது அருகில் இருந்தால்
கவலை மனதில் இல்லையே
உமது உறவில் இருந்தால்
மனது மகிழ்ந்து துள்ளுதே
நற்கருணையிலே எழுபவரே
ஆராதனை புரிவோம்
எம் அருகினிலே வருபவரே
ஆராதனை புரிவோம்

உருகி உருகி நிதம்
உனக்கென எரிந்திடும்
மெழுகு திரிகள் என ஒளிர்ந்திடுவோம்
மலர்ந்து மலர்ந்து உந்தன் பதத்தில்
இணைந்திருந்து
மணக்கும் மலர்கள் என அலங்கரிப்போம் {2}
உமது சீடர் எனவே - உம் பாத
சுவடில் நடப்போம்
உமது அன்பின் கணலை
உலகம் முழுதும் நிறைப்போம்
நற்கருணையிலே எழுபவரே
ஆராதனை புரிவோம்
எம் அருகினிலே வருபவரே
ஆராதனை புரிவோம் - 2

## 20. ஆவியானவரே அல்லல்

ஆவியானவரே அல்லல் அகற்றிடும்
அருட்சுடரே
அகம் அளிப்பவரே அன்பால் ஆள்பவரே
அறிவொளி அருளுமையா
அருளொளி வீசுமையா - 2

நீதானே உலகுக்கு உரு கொடுத்தாய்
நீதானே மண்ணுக்கும்
உயிர் கொடுத்தாய்-2
நீதானே தீமைகளை தகற்றெறிந்தாய்- 2
நீதானே நன்மைகளை வளர்த்தெடுத்தாய்
உன்னைப்போல் ஒரு தெய்வம்
இல்லையே உன்னைப் பிரிந்தாலோ
வாழ்வும் இல்லையே - 2
ஆவியானவரே அல்லல் அகற்றிடும்
அருட்சுடரே
அகம் அளிப்பவரே அன்பால் ஆள்பவரே
அறிவொளி அருளுமையா
அருளொளி வீசுமையா

காற்றாக நெருப்பாக உணரச் செய்தாய்
நாவாக புறாவாக உருவெடுத்தாய் - 2
இறையாட்சிப் பணிக்காக எனைத்
தெரிந்தாய் - 2
இணையற்ற பேரின்பம்
எனில் நிறைத்தாய்
எனைத் தருகிறேன் தூய ஆவியே என்னை
ஏற்பாயோ அன்பின் ஆவியே - 2
ஆவியானவரே அல்லல் அகற்றிடும்
அருட்சுடரே அகம் அளிப்பவரே
அன்பால் ஆள்பவரே
அறிவொளி அருளுமையா அருளொளி
வீசுமையா.

## 21. என்னைத்தொட்டு

எனைத் தொட்டு நலமாக்கும் இயேசுவே - - 4
சுகமாக்குமே சுகமாக்குமே
இயேசுவே என்னை நலமாக்குமே {2}
என்னைத் தொட்டு நலமாக்கும் இயேசுவே - 4

முடமான மகனைக் கண்டு
மனதோடு இரக்கம் கொண்டு
நலமாக்கினீர் சுகமாக்கினீர்
உம் ஆடை நுனி தொட்டதும்
பெரும்பாடு நீங்கிப்போக
தந்தீரே மனமகிழ்ச்சி
பெரும்பாடுகள் நீக்கிட
எனை உம்பாதம் பணிந்திட தந்தேன்
விழிகளை என்மேல் வைத்து
என் வலிகளை ஆற்றிட உன்னைக் கேட்கிறேன்
கேட்கிறேன் உம்மைக் கேட்கிறேன்
சுகமாக்குமே சுகமாக்குமே
இயேசுவே என்னை நலமாக்குமே - 2

அன்பிற்காய் ஏங்கி நின்ற
ஆகாரின் உள்ளம் தொட்டு தேற்றினாய்
மனமாற்றினாய்
பிள்ளைவரம் வேண்டி நின்ற
அன்னாளின் அழுகுரலை
கேட்டதால் பதில் கொடுத்தாய்
என் கண்ணில் வழிந்திடும் கண்ணீர்
அதைக் கண்டிட தினம் உன்னை வேண்டி
அனுதினம் பாதம் வந்து
என் அழுகையை மாற்றிட
தினம் உன்னை வேண்டினேன்
சுகமாக்குமே சுகமாக்குமே
இயேசுவே என்னை நலமாக்குமே - 2
என்னைத் தொட்டு நலமாக்கும் இயேசுவே - 4

## 22. அன்பின் ஊற்றை அருளின்

அன்பின் ஊற்றை அருளின்
சுணையை உன்னை நான் பாடுவேன்
வாழ்வாகும் உந்தன் வார்த்தையைக்
கேட்க
மகிழ்வுடன் தினம் நாடுவேன்
மகிழ்வுடன் தினம் நாடுவேன்
கண்ணின் மணி போல
என்னை தினம் காக்கும்
அன்புத் தாயாகினாய்
கடலும் அலையும் நான் கடந்து
சென்றாலும்
எந்தன் துணையாகினாய்
அன்பின் ஊற்றை அருளின்
சுணையை உன்னை நான் பாடுவேன்
வாழ்வாகும் உந்தன் வார்த்தையைக்
கேட்க
மகிழ்வுடன் தினம் நாடுவேன்
மகிழ்வுடன் தினம் நாடுவேன்

அதிகாலை உதயம் அழகான வானம்
எல்லாம் உன் புகழ் பாடுதே
இதமாக வீசும் இளங்காலைத்
தென்றலும்
எல்லாம் உன் அருள் பாடுதே
அதிகாலை உதயம் அழகான வானம்
எல்லாம் உன் புகழ் பாடுதே
இதமாக வீசும் இளங்காலைத்
தென்றலும்
எல்லாம் உன் அருள் பாடுதே
அருட்கடலே.. ஆண்டவனே..
அருட்கடலே ஆண்டவனே
எங்கு நோக்கினும் உந்தன் தரிசனம்
அழகின் தரிசனம் தான்
சலங்கை ஒலிகளால் இனிய
ஜதிகளால்
உன்னைப் பாடுவேன் நான்
அருள்பவனே ஆள்பவனே
அருட்சுடரே அன்பரசே
அன்பின் ஊற்றை அருளின்
சுணையை உன்னை நான் பாடுவேன்
வாழ்வாகும் உந்தன் வார்த்தையைக்
கேட்க
மகிழ்வுடன் தினம் நாடுவேன்
மகிழ்வுடன் தினம் நாடுவேன்

இசை பாடும் குயிலும் அசைந்தாடும் மயிலும்
எல்லாம் உன் புகழ் பாடுதே
உயர்தோங்கும் மலையும் பாய்தோடும் நதியும்
எல்லாம் உன் அருள் பாடுதே
இசை பாடும் குயிலும் அசைந்தாடும் மயிலும்
எல்லாம் உன் புகழ் பாடுதே
உயர்தோங்கும் மலையும் பாய்தோடும் நதியும்
எல்லாம் உன் அருள் பாடுதே
படைபுகளில் பரம்பொருளே - 2
மனிதம் என்பதும் புனிதம் என்பதும்
உந்தன் தரிசனம் தான்
பாக்கள் பாடுவேன் நடனம் ஆடுவேன்
உந்தன் அருளிலே நான்
வாழ்வினிலே.. அருள்தனையே..
மழையெனவே.. பொழிபவனே..
அன்பின் ஊற்றை அருளின் சுணையை உன்னை நான்
பாடுவேன்
வாழ்வாகும் உந்தன் வார்த்தையைக் கேட்க
மகிழ்வுடன் தினம் நாடுவேன்
மகிழ்வுடன் தினம் நாடுவேன்
கண்ணின் மணி போல
என்னை தினம் காக்கும்
அன்புத் தாயாகினாய்
கடலும் அலையும் நான் கடந்து சென்றாலும்
எந்தன் துணையாகினாய்
அன்பின் ஊற்றை அருளின் சுணையை உன்னை நான்
பாடுவேன்
வாழ்வாகும் உந்தன் வார்த்தையைக் கேட்க
மகிழ்வுடன் தினம் நாடுவேன்
மகிழ்வுடன் தினம் நாடுவேன்

## 23. ஆண்டவர் நானே உன்னோடு

ஆண்டவர் நானே உன்னோடு
இருப்பேன் அஞ்சாதே என் மகனே -2
ஆலயப்பீடம் வந்து விட்டாய்
அஞ்சாதே என் மகனே
ஆயிரம் ஆயிரம் துன்பம் வந்தாலும்
அஞ்சாதே என் மகனே
ஆண்டவர் நான் இருப்பேன்
உன்னோடு
என்று சொன்ன தேவன் வார்த்தை
எந்தன் காதில் மகிழ்ச்சி அமுது
பாய்ந்து ஓடி பரவசப்படுத்தும்
ஆண்டவர் நானே உன்னோடு
இருப்பேன்
அஞ்சாதே என் மகனே

சொந்தம் இழந்தேன் பந்தம் ஆனாய்
சோர்வு வாழ்வில் தீர்வு தந்தாய்
இன்னல் நீக்கி இன்பம் தந்தாய்
இறைவனே ஆறுதல் தந்தார்
ஏற்றத் தாழ்வு ஏழ்மை நோயும்
எத்தனையோ வந்தாலும் இயேசுவே
எனக்காக ஏற்றுக்கொண்டார்
ஆண்டவர் நானே உன்னோடு
இருப்பேன் அஞ்சாதே என் மகனே

இறைவன் வரவு இதயம் குளிரும்
இம்சை நீக்கி இரக்கம் தந்தார்
சின்னஞ்சிறிய பிள்ளைபோல
சிறகடிக்கும் இதயம் தந்தார்
கடும் புயலும் காரிருள் மழையும்
கடினமாக வந்தாலும்
கல்வாரி நாயகன் காத்துக் கொண்டார்
ஆண்டவர் நானே உன்னோடு
இருப்பேன் அஞ்சாதே என் மகனே -2
ஆலயப்பீடம் வந்து விட்டாய்
அஞ்சாதே என் மகனே
ஆயிரம் ஆயிரம் துன்பம் வந்தாலும்
அஞ்சாதே என் மகனே
ஆண்டவர் நான் இருப்பேன்
உன்னோடு
என்று சொன்ன தேவன் வார்த்தை
எந்தன் காதில் மகிழ்ச்சி அமுது

பாய்ந்து ஓடி பரவசப்படுத்தும்
ஆண்டவர் நானே உன்னோடு இருப்பேன்
அஞ்சாதே என் மகனே

## 24. வா மன்னவா என்

வா மன்னவா என் இதயத்தின் உறவாக வா - 2
விரைவாய் வருவாய்
என்றென்றும் நீ என்னில் உறைவாய் - 2
வா மன்னவா என் இதயத்தின் உறவாக வா

என் இதயத்தைக் குடிலாக்கித் தருவேன்
நீ துயில் கொள்ள அங்கே வர வேண்டும்
என் மனதினை ஊஞ்சலாய் அமைத்தேன்
நீ அசைந்தாடி மகிழ்ந்திட வேண்டும்
உனை நெஞ்சில் ஏந்திட
தவம் செய்தேன் தலைவா
தயவோடு என் உள்ளம் எழுந்தருள்வாய் - 2
என் இல்லம் உனை ஏற்கத் தகுதியில்லை
உன் ஒரு சொல்லால் குணமாவேன்
தடையுமில்லை - 2
வா மன்னவா என் இதயத்தின் உறவாக வா

என் இதயத்தில் உன் பாதம் பதிப்பாய்
அதன் அருகினில் அமர்ந்தே மகிழ்வேன்
என் மனம் என்னும் தோணியில் அமர்வாய்
உன் உபதேசம் நாளெல்லாம் கேட்பேன்
உன்னுடைய பக்தனாய் உன்மீது பித்தனாய்
எந்நாளும் வாழ்ந்திடுவேன் எழுந்தருள்வாய் - 2
என் இல்லம் உனை ஏற்கத் தகுதியில்லை
உன் ஒரு சொல்லால் குணமாவேன்
தடையுமில்லை - 2
வா மன்னவா என் இதயத்தின் உறவாக வா - 2
விரைவாய் வருவாய்
என்றென்றும் நீ என்னில் உறைவாய் - 2
வா மன்னவா என் இதயத்தின் உறவாக வா

## 25. தூங்காத இமைபோல

தூங்காத இமைபோல நான் வாழ்கிறேன்
உன் நெஞ்சில் நான் சாய்கிறேன்
தாங்காத சுமையாலே நான் வீழ்கிறேன்
உன் தோளில் துனண காண்கிறேன்
நானும் என்னில் நீரும்
வானும் மீனும் போல
வாழ்வாங்கு வாழ்வோம் தேவா
தூங்காத இமைபோல நான் வாழ்கிறேன்
உன் நெஞ்சில் நான் சாய்கிறேன்

உன் மூச்சுக் காற்றாகி உயிர் வாழும் ஜீவன் நான்
நீரின்றி உயிர் இல்லையே
உன் மூச்சுக் காற்றாகி உயிர் வாழும் ஜீவன் நான்
நீரின்றி உயிர் இல்லையே
உன் அன்பு சொல்லாலே
பலம் காணும் பறவை நான்
உனையன்றி பலம் இல்லையே
என் இருவிழி நீயே என் சிறு கரம் நீயே
என் திருஒளி நீயே என் சிறு வழி நீயே - 2
உன்னாலே உயிர் வாழ்கிறேன்
உன்னோடு உயிராகிறேன்
தூங்காத இமைபோல நான் வாழ்கிறேன்
உன் நெஞ்சில் நான் சாய்கிறேன்

விழிமூடி நடந்தாலும் என் பாதை தெளிவாகும்
உன் பார்வை எனதாகுமே
விழிமூடி நடந்தாலும் என் பாதை தெளிவாகும்
உன் பார்வை எனதாகுமே
வினை சூழ்ந்து விழுந்தாலும்
என் பாதம் விரைந்தோடும்
என் பாதம் நீயாகுமே
என் திருவறை நீயே அருள்நிலை ஒளி நீயே
என் மனநதி நீயே கலங்கரைச் சுடர் நீயே
கவி நூறு தினம் பாடுவேன்
கவின்ராகம் நனாகுவேன்
தூங்காத இமைபோல நான் வாழ்கிறேன்
உன் நெஞ்சில் நான் சாய்கிறேன்
தாங்காத சுமையாலே நான் வீழ்கிறேன்
உன் தோளில் துனண காண்கிறேன்
நானும் என்னில் நீரும்
வானும் மீனும் போல
வாழ்வாங்கு வாழ்வோம் தேவா
தூங்காத இமைபோல நான் வாழ்கிறேன்
உன் நெஞ்சில் நான் சாய்கிறேன்

## 26. பூவுலகெங்கும் அழகழகான

பூவுலகெங்கும் அழகழகான மகிழ்வினைத் தந்தாய்
நன்றி (நன்றி)
உழைத்திடக் களித்திட ஓய்ந்திட அமர்ந்திட எல்லாம்
தந்தாய் நன்றி (நன்றி)
பூவுலகெங்கும் அழகழகான மகிழ்வினைத் தந்தாய்
நன்றி
உழைத்திடக் களித்திட ஓய்ந்திட அமர்ந்திட எல்லாம்
தந்தாய் நன்றி
உணவளித்தாய் உடை கொடுத்தாய்
வாழுமிடம் எமக்களித்தாய் - 2
பூவுலகெங்கும் அழகழகான மகிழ்வினைத் தந்தாய்
நன்றி (நன்றி)
உழைத்திடக் களித்திட ஓய்ந்திட அமர்ந்திட எல்லாம்
தந்தாய் நன்றி (நன்றி)

கடும் இருள்கூட எனில் படர்ந்தாலும்
இருட்டாய் இல்லையே நன்றி (நன்றி-2)
சுடும் வெயில்கூட அனல் உமிழ்ந்தாலும்
குளிராய் தோன்றுதே நன்றி (நன்றி-2)
கடும் இருள்கூட எனில் படர்ந்தாலும்
இருட்டாய் இல்லையே நன்றி (நன்றி-2)
சுடும் வெயில்கூட அனல் உமிழ்ந்தாலும்
குளிராய் தோன்றுதே நன்றி
நடப்பதைப் படுப்பதை அறிந்தவரே
என் வழி தெரிந்தவரே
என்வாய் பேசத்திறக்குமுன்னே
என் சொல் அறிந்தவரே
உணவளித்தாய் உடை கொடுத்தாய்
வாழுமிடம் எமக்களித்தாய் - 2
பூவுலகெங்கும் அழகழகான மகிழ்வினைத் தந்தாய்
நன்றி (நன்றி)
உழைத்திடக் களித்திட ஓய்ந்திட அமர்ந்திட எல்லாம்
தந்தாய் நன்றி (நன்றி)

கடும் செருக்கோடு பகை சூழ்ந்தாலும்
பயமாய் இல்லையே நன்றி (நன்றி-2)
உடல் புண்ணாய் மாறி உறுபிழந்தாலும்
தவிப்பாய் இல்லையே நன்றி (நன்றி-2)
கடும் செருக்கோடு பகை சூழ்ந்தாலும்
பயமாய் இல்லையே நன்றி (நன்றி-2)
உடல் புண்ணாய் மாறி உறுபிழந்தாலும்
தவிப்பாய் இல்லையே நன்றி
நீதியின் ஆண்டவர் எனைத் தேர்ந்தார்
கைவிட விளைவாரா
சாந்தமே சாந்தமே அவர் நெஞ்சில்
காயங்கள் விளைவாரா
உணவளித்தாய் உடை கொடுத்தாய்
வாழுமிடம் எமக்களித்தாய் - 2
பூவுலகெங்கும் அழகழகான மகிழ்வினைத் தந்தாய்
நன்றி (நன்றி)
உழைத்திடக் களித்திட ஓய்ந்திட அமர்ந்திட எல்லாம்
தந்தாய் நன்றி (நன்றி)
பூவுலகெங்கும் அழகழகான மகிழ்வினைத் தந்தாய்
நன்றி
உழைத்திடக் களித்திட ஓய்ந்திட அமர்ந்திட
எல்லாம் தந்தாய் நன்றி
உணவளித்தாய் உடை கொடுத்தாய்
வாழுமிடம் எமக்களித்தாய் - 2
பூவுலகெங்கும் அழகழகான மகிழ்வினைத் தந்தாய்
நன்றி (நன்றி)
உழைத்திடக் களித்திட ஓய்ந்திட அமர்ந்திட எல்லாம்
தந்தாய் நன்றி (நன்றி)
எல்லாம் தந்தாய் நன்றி (நன்றி)
எல்லாம் தந்தாய் நன்றி (நன்றி)
எல்லாம் தந்தாய் நன்றி (நன்றி-2)

## 27. யாதொன்றும் குறையில்லை

யாதொன்றும் குறையில்லை இறைவா
என் தேவன் நீ இருக்க - 2

இருள்சூழ் பள்ளத்தாக்கில் இறைவா
நான் நடக்க நேர்ந்தாலும் - 2
எனக்கேதும் குறையில்லை
என்னோடு நீர் இருப்பதனால்
யாதொன்றும் குறையில்லை இறைவா
என் தேவன் நீ இருக்க

பலபேர் பழிபாவம் இறைவா
என்மீது சொன்னாலும் - 2
எனக்கேதும் குறையில்லை
என்னோடு நீர் இருப்பதனால்
யாதொன்றும் குறையில்லை இறைவா
என் தேவன் நீ இருக்க

நான் நம்பும் நண்பர்களும் எனக்கு
எதிரிகள் ஆனாலும் - 2
எனக்கேதும் குறையில்லை
என்னோடு நீர் இருப்பதனால்
யாதொன்றும் குறையில்லை இறைவா
என் தேவன் நீ இருக்க

நன்மைக்குப் பதிலாக எனக்கு
தீமைகள் வந்தாலும்- 2
எனக்கேதும் குறையில்லை
என்னோடு நீர் இருப்பதனால்
யாதொன்றும் குறையில்லை இறைவா
என் தேவன் நீ இருக்க - 3

## 28. உன்னோடு நான் வாழும்

உன்னோடு நான் வாழும் ஒரு நாளே போதும்
என் வாழ்வில் பொருள் காணவே
என்னோடு நீர் பேசும் ஒரு வார்த்தை போதும்
என் ஜீவன் உயிர் வாழவே
மனதினில் என்றென்றும் மாறாது உன் பாசம் - 2
தெய்வமே உன்னாலே நான் என்றும் வாழ்வேன்
உயிராக உணர்வாக என் தேவா வாரும்
என் வாழ்வில் குறை தீர்த்திடும்
உன்னாலே என் வாழ்வில் எல்லாமும் மாறும்
தாயாக எனைத் தாங்கிடும்
உன்னோடு நான் வாழும் ஒரு நாளே போதும்
என் வாழ்வில் பொருள் காணவே
என்னோடு நீர் பேசும் ஒரு வார்த்தை போதும்
என் ஜீவன் உயிர் வாழவே

உனைவிட்டு வெகுதூரம் சென்றேன்
தூதாரி வாழ்க்கை நான் வாழ்ந்தேன்
உன் அன்பு நெறிகள் நான் மறந்தேன்
உதவாத செயல் எல்லாம் செய்தேன்
செல்வம் சேர்த்தேன் மகிழ்வே இல்லை
உறவைச் சேர்த்தேன் உணர்வே இல்லை
என் வாழ்வை நீர் மாற்றுமே
என் வாழ்வை நீர் மாற்றுமே
உயிராக உணர்வாக என் தேவா வாரும்
என் வாழ்வில் குறை தீர்த்திடும்
உன்னாலே என் வாழ்வில் எல்லாமும் மாறும்
தாயாக எனைத் தாங்கிடும்
உன்னோடு நான் வாழும் ஒரு நாளே போதும்
என் வாழ்வில் பொருள் காணவே
என்னோடு நீர் பேசும் ஒரு வார்த்தை போதும்
என் ஜீவன் உயிர் வாழவே

தடுமாறும் என் வாழ்க்கை ஓடம்
துணையாலே உன் கரையைச் சேரும்
விழியோரம் வழிகின்ற நீரும்
விடை தேடி உன்பாதம் சேரும்
என் வாழ்க்கையில் நம்பிக்கை நீ
உயிர் தேடிடும் உயர் செல்வம் நீ
என் வாழ்வில் எல்லாமே நீ
என் வாழ்வில் எல்லாமே நீ
உயிராக உணர்வாக என் தேவா வாரும்
என் வாழ்வில் குறை தீர்த்திடும்
உன்னாலே என் வாழ்வில் எல்லாமும் மாறும்
தாயாக எனைத் தாங்கிடும்
உன்னோடு நான் வாழும் ஒரு நாளே போதும்
என் வாழ்வில் பொருள் காணவே
என்னோடு நீர் பேசும் ஒரு வார்த்தை போதும்
என் ஜீவன் உயிர் வாழவே

## 29.ஐயா உம் பிரசன்னம்

ஐயா உன் பிரசன்னம் அண்டிவந்தேன் அழியா உன்
வார்த்தைகள் வாழ்வாகணும் - 2

உயிருள்ளது ஆற்றல் வாய்ந்தது
வாளினும் கூர்மையானது - 2 சிந்தனையை சீர் தூக்கி
பார்க்க வல்லது - 2
உம் வார்த்தையே
உம் வார்த்தையே
ஐயா உன் பிரசன்னம் அண்டிவந்தேன்
அழியா உன் வார்த்தைகள் வாழ்வாகணும்

விண்ணும் அழியலாம்
மண்ணும் மறையலாம்
வாழ்வின் செல்வம்

எல்லாம் அழியலாம் - 2
வான் மழை போல் பயன்
தராமல் திரும்புவதில்லை - 2
உம் வார்த்தையே
உம் வார்த்தையே
ஐயா உன் பிரசன்னம் அண்டிவந்தேன்
அழியா உன் வார்த்தைகள் வாழ்வாகணும்

தெய்வீகமே மனுவுரு எடுத்தார்
என் வாழ்வில் குடிகொண்டாரே - 2
ஆன்மாவை அழியாமல் ஆட்கொள்ளுமே - 2
உம் வார்த்தையே
உம் வார்த்தையே
ஐயா உன் பிரசன்னம் அண்டிவந்தேன்
அழியா உன் வார்த்தைகள் வாழ்வாகணும் -2
அழியா உன் வார்த்தைகள் வாழ்வாகணும்

## 30. தூய ஆவியே துணை வரும்

தூய ஆவியே துணை வரும் ஆவியே
வரங்களின் இறைவா அருள்மழை பொழிவாய்
உலகினை நிரப்பிடுவாய் - எந்நாளும்
வரங்களின் இறைவா அருள்மழை பொழிவாய்
உலகினை நிரப்பிடுவாய்
எங்களின் மீது நிறைவாய் வருவாய் - 2

மகிழ்வின் ஊற்றே உயிரில் மலர்வாய்
ஆன்மபலம் தருவாய்
அருளின் ஒளியாய் புதிய படைப்பாய்
எங்களை மாற்றிடுவாய் - {2}
தூய ஆவியே துணை வரும் ஆவியே
வரங்களின் இறைவா
அருள்மழை பொழிவாய் உலகினை
நிரப்பிடுவாய் - எந்நாளும்
வரங்களின் இறைவா அருள் மழை பொழிவாய்
உலகினை நிரப்பிடுவாய்
எங்களின் மீது நிறைவாய் வருவாய் - 2

இதய ஒளியே உள்ளத்தில் உறைவாய் மனதில்
திடம் தருவாய்
நம்பிக்கை ஒளியாய் உமது பிள்ளையாய்
எங்களை மாற்றிடுவாய் {2}
தூய ஆவியே துணை வரும் ஆவியே
வரங்களின் இறைவா அருள் மழை பொழிவாய்
உலகினை நிரப்பிடுவாய் -எந்நாளும்
வரங்களின் இறைவா அருள் மழை பொழிவாய்
உலகினை நிரப்பிடுவாய் எங்களின் மீது நிறைவாய்
வருவாய் - 2

எளியோர் தந்தையே எம்மிலே வருவாய்
ஆற்றல் இன்று தருவாய் பேரிப ஒளியால் அழுகை
மாற்றி
எங்களை ஆற்றிடுவாய்- {2}
தூய ஆவியே துணை வரும் ஆவியே
வரங்களின் இறைவா அருள் மழை பொழிவாய்
உலகினை நிரப்பிடுவாய் - எந்நாளும்
வரங்களின் இறைவா அருள் மழை பொழிவாய்
உலகினை நிரப்பிடுவாய்
எங்களின் மீது நிறைவாய் வருவாய் -2

## 31. மான்புயர் இவ்வருள்

மாண்புயர் இவ்வருள் அனுமானத்தை
தாழ்ந்து பணிந்து ஆராதிப்போம்
பழைய நியம முறைகள் அனைத்தும்..
இனி மறைந்து முடிவு பெறுக - புதிய
நியம முறைகள் வருக
புலன்களாலே மனிதன் இதனை
அறிய இயலாக் குறையை நீக்க
விசுவாசத்தின் உதவி பெறுக

பிதா அவர்க்கும் சுதன் இவர்க்கும்
புகழ்ச்சியோடு வெற்றியார்ப்பும் மீட்பின்
பெருமை மகிமையோடு..
வலிமை வாழ்த்து யாவுமாக
இருவரிடமாய் வருகின்றவராம்
தூய ஆவியானவர்க்கும் அளவில்லாத சம
புகழ்ச்சி என்றென்றுமே உண்டா..க
இனிய நல்தேவன் வாழ்கவே ..

## 32. அருட்திரு தேவதேவன்

அருட்திரு தேவ தேவன் போற்றி!
அவர்தம் திரு நாமம் போற்றி!
அவர் மகன் இயேசு கிறிஸ்து போற்றி!
அவர்தம் திரு அன்பே போற்றி!
அருட்திரு தூய ஆவி போற்றி!
அவர்தம் திரு தியானம் போற்றி!

அருட்திரு அன்னை மரியாள் போற்றி!
அவர்தம் திரு தூய்மை போற்றி!
அருட்திரு சூசை முனியும் போற்றி!
அவர்தம் திரு வாய்மை போற்றி!

அருட்திரு தூதர் அமரர் போற்றி!
அவர்தம் திரு சேவை போற்றி!
அருட்திரு தேவதேவன் போற்றி!
அவர்தம் திரு நாமம் போற்றி!!!

## 33. இறையுறவில் மலர்ந்திடுவோம்

இறையுறவில் மலர்ந்திடுவோம்
இணைந்து வாருங்கள்
இனிய தேவன் தந்த பலியில்
மகிழ்ந்து கூடுங்கள்
இறையுறவில் மலர்ந்திடுவோம்
இணைந்து வாருங்கள்
இனிய தேவன் தந்த பலியில்
மகிழ்ந்து கூடுங்கள்
வாருங்கள் வாருங்கள்
தந்தை இல்லம் வாருங்கள்
பாடுங்கள் பாடுங்கள்
இயேசு நாமம் பாடுங்கள்
வாருங்கள் வாருங்கள்
தந்தை இல்லம் வாருங்கள்
பாடுங்கள் பாடுங்கள்
இயேசு நாமம் பாடுங்கள்

உதயமாகும் இனிய உறவு வாருங்கள்
உலகில் சென்று பலன் தரவே கூடுங்கள் - 2
பகரும் உள்ளம் நாம் பெறுவோம் வாருங்கள் -
2
நாம் பரமன் அன்பில்
வாழ்ந்திடுவோம் கூடுங்கள் - 2

வாருங்கள் வாருங்கள்
தந்தை இல்லம் வாருங்கள்
பாடுங்கள் பாடுங்கள்
இயேசு நாமம் பாடுங்கள்
வாருங்கள் வாருங்கள்
தந்தை இல்லம் வாருங்கள்
பாடுங்கள் பாடுங்கள்
இயேசு நாமம் பாடுங்கள்

சுமை மறந்து சுகம்
பெறுவோம் வாருங்கள்
இமை திறந்து விடியல் க
ாணக் கூடுங்கள் - 2
இருள் மறைந்து
ஒளி நிறையும் வாருங்கள் - 2
நாம் அருள் வாழ்வில்
மகிழ்ந்திடுவோம் கூடுங்கள் - 2
வாருங்கள் வாருங்கள்
தந்தை இல்லம் வாருங்கள்
பாடுங்கள் பாடுங்கள்
இயேசு நாமம் பாடுங்கள்
வாருங்கள் வாருங்கள்
தந்தை இல்லம் வாருங்கள்
பாடுங்கள் பாடுங்கள்
இயேசு நாமம் பாடுங்கள்
இறையுறவில் மலர்ந்திடுவோம்
இணைந்து வாருங்கள்
இனிய தேவன் தந்த பலியில்
மகிழ்ந்து கூடுங்கள்
இறையுறவில் மலர்ந்திடுவோம்
இணைந்து வாருங்கள்
இனிய தேவன் தந்த பலியில்
மகிழ்ந்து கூடுங்கள்
வாருங்கள் வாருங்கள்
தந்தை இல்லம் வாருங்கள்
பாடுங்கள் பாடுங்கள்
இயேசு நாமம் பாடுங்கள்
வாருங்கள் வாருங்கள்
தந்தை இல்லம் வாருங்கள்
பாடுங்கள் பாடுங்கள்
இயேசு நாமம் பாடுங்கள்

## 34. உள்ளம் வருந்தி உள்ளம் திருந்தி

உள்ளம் வருந்தி உள்ளம் திருந்தி நான் வருகின்றேன்
உந்தன் மகளாய் என்னை ஏற்று இல்லத்தில்
சேர்ப்பாயா
உள்ளம் வருந்தி உள்ளம் திருந்தி நான் வருகின்றேன்
உந்தன் மகளாய் என்னை ஏற்று இல்லத்தில்
சேர்ப்பாயா

உன்னை மறுத்தேன் உன்னை மறந்தேன்
உன்னை மறுதலித்தேன்
உந்தன் மகள் எனும் தகுதி இழந்தேன்
என்னை மன்னிப்பாயா
உன்னை மறுத்தேன் உன்னை மறந்தேன்
உன்னை மறுதலித்தேன்
உந்தன் மகள் எனும் தகுதி இழந்தேன்
என்னை மன்னிப்பாயா
உள்ளம் வருந்தி உள்ளம் திருந்தி நான் வருகின்றேன்
உந்தன் மகளாய் என்னை ஏற்று இல்லத்தில்
சேர்ப்பாயா

உன்னை வெறுத்தேன் உன்னைப் பிரிந்தேன்
உன்னை இகழ்ந்து விட்டேன்
உந்தன் மகள் எனும் மாண்பை இழந்தேன்
என்னை மன்னிப்பாயா
உன்னை வெறுத்தேன் உன்னைப் பிரிந்தேன்
உன்னை இகழ்ந்து விட்டேன்
உந்தன் மகள் எனும் மாண்பை இழந்தேன்
என்னை மன்னிப்பாயா
உள்ளம் வருந்தி உள்ளம் திருந்தி நான் வருகின்றேன்
உந்தன் மகளாய் என்னை ஏற்று இல்லத்தில்
சேர்ப்பாயா

உன்னைப் பழித்தேன் உன்னைப் பகைத்தேன்
உன்னை அவமதித்தேன்
உந்தன் மகள் எனும் உறவை இழந்தேன்
என்னை மன்னிப்பாயா
உன்னைப் பழித்தேன் உன்னைப் பகைத்தேன்
உன்னை அவமதித்தேன்
உந்தன் மகள் எனும் உறவை இழந்தேன்
என்னை மன்னிப்பாயா
உள்ளம் வருந்தி உள்ளம் திருந்தி நான்
வருகின்றேன்
உந்தன் மகளாய் என்னை ஏற்று இல்லத்தில்
சேர்ப்பாயா - 3

## 35. வந்தோம் தந்திடவே தந்தாய்

வந்தோம் தந்திடவே தந்தாய் ஏற்றிடுவாய்
எம்வாழ்வை உமக்கே பலியாய் தந்தோம்
அன்பாய் ஏற்றிடுவாய் - 2

இறைவா உன்னில் இணையா வாழ்வு
இருந்தும் பயன் என்ன? -2
இகத்தில் நீ தந்த வாழ்வைத் தந்தால்
எனக்கு இழப்பென்ன
இனிவாழும் காலம் இனிதாக வேண்டும்
இறைவா உன்னோடு இணைந்தாக
வேண்டும்
இணைந்தாக வேண்டும்

வந்தோம் தந்திடவே தந்தாய் ஏற்றிடுவாய்
எம்வாழ்வை உமக்கே பலியாய் தந்தோம்
அன்பாய் ஏற்றிடுவாய்

இறைவா எந்தன் உள்ளம் என்றும்
உன்னைத் தேடுதே - 2
உன்னில் இணைந்து உயர்வு பெறவே
விரைந்து நாடுதே
உன் நாமம் ஓங்க எந்நாளும் வாழ்ந்து
இறைவா உன்னோடு இணைந்தாக
வேண்டும்
இணைந்தாக வேண்டும்

வந்தோம் தந்திடவே தந்தாய் ஏற்றிடுவாய்
எம்வாழ்வை உமக்கே பலியாய் தந்தோம்
அன்பாய் ஏற்றிடுவாய் - 2

## 36. இதயம் விரும்பும் இனிய தலைவன்

இதயம் விரும்பும் இனிய தலைவன்
எழுந்து வருகின்றார் - 2
உதயப் பொழுதில் காலைக் கதிராய் - 2
உவகை தருகின்றார் - இயேசு
உள்ளம் அமர்கின்றார்
இதயம் விரும்பும் இனிய தலைவன்
எழுந்து வருகின்றார்

புலரும் காலைப் பொழுதினிலே
சுவாசமாய் என்னுள் வாராயோ - 2
நலன்கள் அருளும் மன்னவா
வளங்கள் அள்ளித் தாராயோ - 2
தேனின் சுவையே தெவிட்டா விருந்தே
வானின் அமுதே வாருமே
வானின் அமுதே வாருமே
இதயம் விரும்பும் இனிய தலைவன்
எழுந்து வருகின்றார்

மயங்கும் மாலைப் பொழுதினிலே
மனதினில் அமைதி தாராயோ - 2
இரக்கம் நிறைந்த தெய்வமே
இன்பம் அருளும் இறைவனே - 2
அருளின் ஊற்றே அன்பின் பெருக்கே
வாழ்வின் வழியே வாருமே
வாழ்வின் வழியே வாருமே
இதயம் விரும்பும் இனிய தலைவன்
எழுந்து வருகின்றார் - 2
உதயப் பொழுதில் காலைக் கதிராய் - 2
உவகை தருகின்றார் - இயேசு
உள்ளம் அமர்கின்றார்
இதயம் விரும்பும் இனிய தலைவன்
எழுந்து வருகின்றார்

## 37. நன்றியோடு பாடுவேன் நாதனை

நன்றியோடு பாடுவேன்
நாதனை நான் போற்றுவேன்
அவர் செய்த நன்மைக்காய்
நன்றி கூறுவேன் - 2

வறுமை என்னை நெருக்கலாம்
உலகம் என்னை வெறுக்கலாம்
அன்னையாக அருகிருப்பாய்
நன்றி இயேசுவே
வாழும் வழிகள் காட்டினாய்
வீழும் பொழுது தாங்கினாய்
நாளும் நல்கும் நலன்களுக்காய்
நன்றி இயேசுவே
என் வாழ்வில் வளங்கள் சேர்க்கிறாய்
வீழ்ந்திடாமல் காக்கிறாய்
வாழ்வில் சேர்க்கிறாய்
வீழ்ந்திடாமல் காக்கிறாய்
நன்றி நன்றி நன்றி இயேசுவே
நன்றியோடு பாடுவேன்
நாதனை நான் போற்றுவேன்
அவர் செய்த நன்மைக்காய்
நன்றி கூறுவேன் - 2

உதவும் கரங்கள் கோர்க்கிறாய்
உறவில் சுரங்கள் சேர்க்கிறாய்
உலகம் வாழ உயிரை தந்தாய்
நன்றி இயேசுவே
ஏழை கண்ணீர் துடைக்கவும்
நீதி மண்ணில் படைக்கவும்
புதிய இதயம் எனக்கு தந்தாய்
நன்றி இயேசுவே
உன் சிலுவைதனை காட்டினாய்
மீட்பை நிலை நாட்டினாய்
சிலுவைதனை காட்டினாய்
மீட்பை நிலை நாட்டினாய்
நன்றி நன்றி நன்றி இயேசுவே
நன்றியோடு பாடுவேன்
நாதனை நான் போற்றுவேன்
அவர் செய்த நன்மைக்காய்
நன்றி கூறுவேன் - 2

## 38. அம்மா அமுதினும் இனியவளே

அம்மா அமுதினும் இனியவளே
அமலியாய் உதித்தவளே
அகமே மகிழ்வாய் மரியே
அம்மா அமுதினும் இனியவளே
அமலியாய் உதித்தவளே
அகமே மகிழ்வாய் மரியே
அம்மா....

தேவனாம் ஆண்டவரை
கோவினில் ஈன்றவளே - 2
அருளினிலே உயர்ந்தவளே
அடியவர் நாவில் நிறைந்தவளே
அம்மா அமுதினும் இனியவளே
அமலியாய் உதித்தவளே
அகமே மகிழ்வாய் மரியே
அம்மா.....

அழுகுரல் கேட்கையிலே
ஆறுதல் அளிப்பவளே
அருகினிலே இருப்பவளே
அடைக்கலம் தந்து அணைப்பவளே
அம்மா அமுதினும் இனியவளே
அமலியாய் உதித்தவளே
அகமே மகிழ்வாய் மரியே
அம்மா அமுதினும் இனியவளே
அமலியாய் உதித்தவளே
அகமே மகிழ்வாய் மரியே
அம்மா.....